Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 6 ஜூன்-2007



## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. தேவனுடைய ஜனங்களின் உண்மைத் தன்மை ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். ..... 24
7. புது சிருஷ்டியேக் காரியம் ........ 28
8. இரத்தசாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 20** **JUNE - 2007** **Issue - 6**


## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

**ஆ**ம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப் படுத்தப்பட்ட **90 பாடங்கள்** அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.

வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு பட்டயச் சான்றிதழ் (Diploma Certificate) வழங்கப்படும்.

சேர்ந்து படிக்க விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு **ரூ. 50/-** மணியாடர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு :** எங்களிடம் ஏற்கனவே அடிப்படை அஞ்சல் வழிக்கல்வி Basic Bible Course படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

**THIS ADVANCED BIBLE CORRESPONDENCE COURSE AVAILABLE IN ENGLISH ALSO**

ஆசிரியர் உரை

# நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு

மானிடப் பிறவிகளாகிய நாம் இப்பூமிக்குரிய வாழ்வு சிறந்திருப்பதற்கு நமக்கு நாமே சில வழக்கங்களை நமது வசதிக்கேற்ப வகுத்து வைத்துள்ளோம். அப்படி வகுத்துள்ளவைகளை எப்படி நடைமுறைப் படுத்துவதென்பதற்கும் நாம் ஒரு திட்டம் வைத்திருப்போம். நடைமுறைப் படுத்தும் எல்லாவற்றையும் நாம் ஒரே சமயத்திலோ அல்லது ஒரே விதமாகவோ செய்வதில்லை. எதை எப்படிச் செய்யவேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு கால அளவையும், கால இடைவெளிக்கான அட்டவணையும் வைத்திருப்போம். அதனடிப்படையில், சிலவற்றை வருடந்தோறும் செய்வோம், வேறு சிலவற்றை மாதத்திற்கு ஒரு முறை என்று கைக்கொள்ளுவோம், இன்னும் சிலவற்றை வாரந்தோறும் கடைப்பிடிப் போம். மீதமிருப்பவைகள் நாள்தோறும் செய்வதற்குத் தகுதியானவைகளாக இருக்கும். இப்படி நாம் ஏற்படுத்திக் கொள்ளும் கால அளவு அல்லது கால இடைவெளிக்கான அடிப்படை ஒரு குறிப்பிட்ட காரியத்தின் அவசியம் சார்ந்ததாகவோ அல்லது அதன் தன்மையைப் பொறுத்தோ இருக்கும். நான் சொல்லும் இக்கருத்து உங்களுக்கு உடன்பாடானதாகவே இருக்கும் என்று நம்புகிறேன்.

இதைப்போலவே, பரலோகத்தின் தேவனும், அவரை விசுவாசிப்ப வர்கள் அவருக்காகச் செய்ய வேண்டிய காரியங்களில் சிறந்தும், ஒப்பற்றும் திகழும்படியாய் சில திட்டங்களையும், ஒழுங்குகளையும் ஆவியானவர் மூலம் நமக்கு அருளித் தந்திருக்கிறார். அவைகளில் வருடந்தோறும் செய்ய வேண்டியவைகள் உண்டு (லேவி. 23:5,6, 15,16; 23:33-36). மாதந்தோறும் அனுசரிக்க வேணடியவைகள் உண்டு (ஏசா. 1:13,14; 2ராஜா. 4:23) வாரந்தோறும் கடைபிடிக்க வேண்டியவைகள் உண்டு. (யாத். 20:7-11). இன்னும், தினந்தோறும் நிறைவேற்ற வேண்டியவைகளும் உண்டு. (நீதி. 23:7) சர்வ வல்லவரால் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில் இவைகள் இப்படி இடம் பெற்றிருந்தாலும், சொல்லப்பட்டிருக்கும் அனைத்தும் எல்லாக் காலத்திலும் வாழும் எல்லோருக்கும் பொதுவானவைகளாகக் கொடுக்கப்பட வில்லை. உதாரணமாக, பண்டிகைகள், மாதப் பிறப்புகள் போன்றவை பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கான கட்டளைகளாக இருந்தது. ஆனால், வாரந்தோறும், தினந்தோறும் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டவைகள் இரண்டு பிரமாணங்களுக்கும் பொதுவானவைகளாகவே பெரும்பாலும் இருக்கிறதை நாம் காண முடியும்.

படைத்த தேவனை வாரந்தோறும் ஆராதிக்க வேண்டுமென்ற கட்டளை பழைய பிரமாணத்திலும் உண்டு (யாத். 20:7-11) புதிய பிரமாணத்திலும் உண்டு (எபி. 10:25; அப். 20:7). அதுபோலவே, தான் கர்த்தருக்குப் பயந்து வாழவேண்டுமென்பது இரண்டு ஏற்பாடுகளிலும் உண்டு (1சாமு. 12:24, யோபு. 1:8, அப். 9:31, நீதி. 23:17). **கர்த்தருக்குப் பயப்படும் இப்பயம் பற்றித்** தான் நாம் இம்மாதம் பார்க்கப்போகிறோம்.

"**நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு**" என்று நீதிமொழிகள் 23:7ல் இடம் பெற்றிருக்கும் இவ்வழகிய வசனம் ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவரால் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இந்நூலுக்கான சிறப்பு, இது பழைய ஏற்பாட்டின் நடைமுறைப் புத்தகம் என்பது. அவபக்தியான இவ்வுலகில் தேவ பக்தியோடு வாழ்வதற்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. தேவனுக்கு ஒருவன் பயந்து நடக்க வேண்டுமென்று பழைய புதிய ஏற்பாடுகள் சுமார் 300 இடங்களில் நேரிடையாகவும், மறைமுகமாகவும் கூறுகிறது. இது நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்குப் பயப்படுவது எவ்வளவு முக்கியம் என்பதையே காட்டுகிறது.

கர்த்தருக்குப் பயப்படாத நிலைமை எப்படிப்பட்ட தீமைக்கும் ஒருவனை வழி நடத்தும் என்பதை வேதாகமத்தின் முதல் நூலாகிய ஆதியாகமம் 20ம் அதிகாரத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும். அங்கே, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், கேராரின் ராஜாவினிடத்தில் தன் மனைவியாகிய சாராளை சகோதரி என்று பொய் சொன்னதினிமித்தம் அவன் சாராளை தனக்காக எடுத்துக் கொண்டான். இத்தீமையான செயலுக்காகத் தேவ எச்சரிப்பு பெற்ற அவன், ஆபிரகாமை அழைப்பித்துக் கடிந்து கொண்டு, "என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தைச் செய்தாய் என்றான்" (20:10). இக்கேள்விக்கு ஆபிரகாமின் பதிலைத் தயவாய் கவனியுங்கள். "**அதற்கு ஆபிரகாம் இவ்விடத்தில் தெய்வ பயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்று போடுவார்களென்றும் நான் நினைத்தேன்**" (20:1) என்றான். தெய்வ பயமில்லாமை கொலைக்குக் கூட ஒருவனை வழிநடத்திவிடும் என்பதே இதன் பொருள்.

தனக்குப் பயப்படும் பயத்தை தேவன் அவரைப் பின்பற்றுபவர்களிடம் மிக அதிகமாக எதிர்பார்க்கிறார். பழைய ஏற்பாட்டில் லேவியராகம புத்தகமும் ஒரு வகையில் விசேஷமானது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வந்தவர்களை வழிநடத்தும்படியாகக் கொடுக்கப்பட்ட ஒன்று. தன்னை விடுவித்த தேவனை எப்படி **ஆராதிப்பது**, அவருக்கு எப்படி **ஊழியம் செய்வது**, அவருக்கு எந்தளவு **கீழ்ப்படிவது** போன்றவை இந்நூலில் உண்டு. இப்படிச் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் தெய்வ பயம் அவசியம் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டுள்ள (லேவி. 6:13; 6:24; 10:12) தென்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தேவனால் எதிர்பார்க்கப்படும் இந்த பயம் கோடை மழைபோன்று விட்டு விட்டு வரும் ஒன்றாக இல்லாமல். அடை மழை போன்று தொடர்ந்து இருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். அது, நாள்தோறும் இருக்கும் ஒன்றாக மாத்திரமல்ல நாள் முழுவதும் இருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். எப்பொழுதும் பயந்திருக்கிறவனையே வேதாகமம் பாக்கியவான் என்று கூறுகிறது. (நீதி. 28:14). வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு மூன்று முறை பண்டிகை கொண்டாடுவதன் மூலமோ, மாதத்திற்கு ஒருமுறை திருவிருந்தில் பங்கு பெறுவதன் மூலமோ, வாரத்திற்கு ஒரு முறை ஆராதனைக்குத் தாமதமாகப் போய் கட்டிடத்திற்கு வெளியே உட்கார்ந்து வருவதன் மூலமோ, முக்காடு போட்டு உள்ளே உட்கார்ந்து எழுந்து வருவதன் மூலமோ நாம் பாக்கியவான்களாக மாற முடியாது. மாறாக, நாம் ஒவ்வொரு வரும் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்.

சரி, "நீ நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" என்ற வசனப் பகுதியைத் தொட்டு நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்ன என்று இப்பொழுது பார்ப்போம்.

## 1. கர்த்தருக்குப் பயப்படும் பயத்தின் தன்மை

"நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" என்ற தலைப்பைத் தொட்டு நாம் கவனிக்க வேண்டிய பாடம். இந்நாட்களில் கர்த்தருக்குப் பயப்படும் தன்மை பற்றியது.

இந்நாட்களில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்று சொல்லும் போது, ஏதோ முன்நாட்களில் அது நன்றாக இருந்ததென்றும், இந்நாட்களில் தான் அது அருகி வருகிறதென்றும் நான் சொல்லவில்லை. சொல்லப்போனால், எல்லா நாட்களிலும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஒரே விதமாகத் தான் இருந்து வந்துள்ளது. ஜலப்பிரளயத்துக்கு முந்தின காலமாக இருந்தாலும் (ஆதி. 6:5,6) வனாந்திர யாத்திரையின் வருடங்களாக இருந்தாலும், யாத். 15:24, 16:8) நியாயாதிபதிகளின் நாட்களாக இருந்தாலும் (நியா. 2:11-13), அதைத் தொடர்ந்து வந்த ராஜாக்களின் அரசாட்சியின் கீழாக இருந்தாலும், (1சாமு. 12:10; 2 சாமு. 24:1) கடைசியாக தீர்க்கதரிசியின் காலகட்டமாக இருந்தாலும் (எரே. 2:19; மல். 1:6) நிலைமை ஒன்று தான். இந்த மரமானிடம், இந்த ஒரு காரியத்தில் இடித்த புளியாக ஒரே இடத்திலேயே இருக்கிறது. இருப்பினும், நாம் வாழும் நாட்களின் நிலை நமக்கு நிதர்சனமாகத் தெரிவதால், அதுபற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுவோம்.

இக்காலத்துக் கிறிஸ்தவ சமுதாயத்தின் நிலையை பழைய ஏற்பாட்டு ராஜாக்கள் காலத்து ஒரு நிலையோடு ஒப்பிடும்போது, அது அப்படியே ஒத்து வருகிறதென்பதை நாம் தத்ரூபமாகக் காணலாம். ஆம், இஸ்ரவேலில் இருந்த

ஜனங்களுக்கும், தேவனுக்கும் இருந்த உறவைக் குறித்து ஆவியானவர் குறிப்பிடும் போது, **அப்படியே அந்த ஜாதிகள் கர்த்தருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள்** (2ராஜா 17:41). எவ்வளவு அருமையான ஜனங்கள்! கர்த்தருக்குப் பயப்படுகிறார்கள். அதே சமயம் அவருக்குப் பிரியமில்லாதவைகளையும் மனப்பூர்வமாகச் செய்கிறார்கள்! ஆம், அசீரியர்கள் சமாரியாவை வெற்றி கொண்டு சிறைப்பிடித்துப் போன பின்பு வேறு இடங்களிலிருந்து ஜனங்கள் சமாரியாவில் குடியேற்றப்பட்டார் கள். அவர்கள் யெகோவா நாமத்தைச் சொல்லி பெத்தேலில் அவரை ஆராதிக்க வந்தார்கள். ஆயினும், அவர்கள் கர்த்தருக்குப் பயந்து சேவிக்க வோ, அவருடைய வார்த்தைகளை அவருக்குப் பயந்து கைக்கொள்ளவோ செய்யவில்லை.

அருமையானவர்களே, இதே நிலைமை அப்படியே கிறிஸ்தவ மத உலகில் இருப்பது உங்களுக்குத் தெரிகிறதா இல்லையா? இன்றைக்குக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுபவர்கள் யாராக இருந்தாலும் அவர் களுக்குள் கர்த்தரைப் பற்றிய பயம் அறவே இல்லையென்று நாம் கூறிவிட முடியாது. ஏனெனில், ஏதாவது ஒரு வகையில் அவர்கள் தேவ காரியங்களில் நாட்டமுடையவர்களாகவே இருக்கிறார்கள். தேவனைப் பற்றிய பயமும், நினைப்பும் இல்லாவிட்டால் இப்படியிருக்க முடியாது. ஆயினும், நாம் கவனிக்க வேண்டியது, கர்த்தரைப் பற்றிய பயம் அவர் களைக் கீழ்ப்படிதலுக்கு அழைத்துச் செல்லுகிறதா என்பதே. ராஜாக்கள் காலத்து மக்களைப் போல கர்த்தருக்கும் பயந்து, விக்கிரகங்களையும் சேவிப்பதால் எவ்விதப் பயனும் இல்லை. தேவனுக்கு பயப்படும் ஒருவனைக் கட்டாயம் அவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும் (பிர. 12:13).

அப்படியானால், அருமையானவர்களே, தேவனுக்குப் பயப்படு கிறேன் என்று சொல்லுகிற நானும், நீங்களும் தேவனுடைய கட்டளைக ளெல்லாவற்றிற்கும் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் கீழ்ப்படிந்து நடக்கிறோமா? இக்காரியத்தில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? சொல்லுங்கள். கர்த்தருக்கு பயந்து, விக்கிரகங்களையும் வணங்குகிறவர் வர்களாக உள்ளோமா? ஒருவேளை நாம் ஆராதனைக்கு பயத்தோடே சென்றும், அவரை ஆவியோடும், உண்மையோடும் (யோவா. 4:24). ஆராதிக்காதவர்களாக இருந்தால், நாம் விக்கிரகங்களையும் சேர்த்து வணங்குகிறவர்களாகவே இருப்போம். புதிய ஏற்பாட்டில் சொல்லப்படாத ஒருவேளை பண்டிகைகளை, நாம் பயத்தோடே அனுஷ்டிக்கிறவர்களாக இருந்தாலும் நாம் விக்கிரகங்களையும் வணங்குகிறவர்களாகவே இருப் போம். அதுபோலவே, புதிய ஏற்பாட்டு வசன ஆதாரமில்லாத செயல்களை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் எவ்வளவு பயத்தோடே செய்தாலும்

அவைகள் அனைத்தும் கர்த்தருக்கும் பயந்து, விக்கிரகங்களையும் வணங்குகிற செயலாகவே இருக்கும்.

ஆகவே, நாம் யாரும் இப்படிப்பட்டவர்களாக இராமல், தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, இன்று நம்மைக் கட்டுப் படுத்தும் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படுத்துவோம்.

## II கர்த்தருக்குப் பயப்படுவதால் கிடைக்கும் நன்மை

"நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" என்ற வசனத்தி லிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், அவருக்குப் பயப்படுவதால் கிடைக்கும் ஆசீர்வாதம்.

நம்முடைய தேவன் ஆசீர்வாதத்தின் தேவன். "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே எனக்குப் பிரியம்" (எண். 24:1) என்று சொல்லியுள்ளார். இப்படிப்பட்ட தேவன் தமது ஆவியானவர் மூலம் ஞானியைக் கொண்டு, "கர்த்தருக்குப் பயப்படுதலுக்கு வரும் பலன், **ஐசுவரியமும், மகிமையும் ஜீவனுமாம்**" என்கிறார் (நீதி. 22:4). இவ்வசனம் மூன்று பிரதான ஆசீர்வாதங் களை நமக்கு வாக்களித்துள்ளது.

ஐசுவரியம். இப்பூமிக்குண்டான வாழ்வில் ஐசுவரியத்தை, செல்வத்தை சேகரிப்பதற்காக மனிதன் படாதபாடு படுகிறான். தேவனுக்குப் புறம்பான, வேத வசனங்களுக்கு ஒவ்வாத வழிகளில் சென்று அவைகளை அடைய முயற்சிக்கிறான். அதாவது, ஒருவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடப்பதன் மூலம் ஒருபோதும் ஐசுவரியத்தை அடைய முடியாது என்று தனக்குத் தானே தீர்மானித்துக் கொள்ளுகிறான். ஆனால், இது உண்மையல்ல. ஈசாக்குக்குப் பெண் பார்க்கச் சென்ற ஆபிரகாமின் வேலைக் காரன் எலியேசர் ஆபிரகாம் பற்றிக் கூறும்போது, **கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்;** ... என்றான் (ஆதி. 24:35). இன்னும், யோபு, "..... கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரிய வனாயிருந்தான்" என்று பார்க்கிறோம் (யோபு. 1:3) நீதிமொழிகள் ஆசிரியரும் இக்கூற்றை ஆமோதிக்கிறார். "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதி. 10:22) என்று.

இங்கே ஒன்றை நன்றாகக் கவனியுங்கள். ஐசுவரியத்தை எப்படி வேண்டுமானாலும், அதாவது தேவனுக்கு விரோதமான வழிகளிலும் சேர்க்கலாம் என்பவர்கள் வேதனையில் சிக்கிக் கொள்ளுவார்கள். ஆனால், கர்த்தருக்குப் பயந்து வாழ்வதினால் வரும் ஆசீர்வாதத்திற்கும் வேதனைக் கும் சம்பந்தமிருக்காது. அப்படியானால், எதன் வழியாக நீங்கள் ஒவ்வொரு வரும் ஆசீர்வதிக்கப்பட வேண்டு மென்று தீர்மானியுங்கள்.

**மகிமை,** இதுவும் கர்த்தருக்குப் பயப்படுவதால் கிடைக்கும் ஆசீர்வாதமாக நீதிமொழிகளில் சொல்லப்படுகிறது. மகிமை குறித்து ரோமர் 8:30லும் நாம் பார்க்கலாம். "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக் கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார். இங்கே, குறிப்பிடப்படும் மகிமை பணத்தினாலோ, பதவியினாலோ, செல்வத்தினாலோ, செல்வாக்கினாலோ வரும் ஒன்று அல்ல. சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டு (2 தெச. 2:14). அந்த சுவிசேஷ வசனங்களுக்குக் கீழ்ப்படிவதால் யாரெல்லாம் நீதிமான்களாக்கப் படுகிறார்களோ அவர்களுக்கு வரும் மகிமை. இந்த மகிமைக்குச் சொந்தமானவர்கள், மறுமையின் வாழ்வுக்குப் பாத்திரவான்கள். இந்த மகிமையும், கர்த்தருக்குப் பயப்படுவதால் வரும் ஆசீர்வாதங்களில் ஒன்று என்பது நினைவிலிருக்கட்டும்.

**ஜீவன்,** இது இரண்டு வகை. முதலாவது, பூமிக்குரியது. அடுத்தது, நித்தியத்திற்குரியது. முதலாவது, அழிந்து போகக் கூடியது. இரண்டாவது என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியது. இப்பூமிக்குண்டான ஜீவன் பற்றி, யாக்கோபு ஆசிரியர் கூறும்போது, "..... உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே என்கிறார் (யாக். 4:14). ஆகவே தான், அழிந்து போகிற இந்த ஜீவனுக்காகக் கவலைப்படாதிருங்கள் என்று இயேசு மலைப் பிரசங்கத்தில் சொல்லியுள்ளார் (மத். 6:31). நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம் இந்த ஜீவன் பற்றியதல்ல. யோவான் ஆசிரியர் இதைத் தெளிவுபடுத்துகிறார். **நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் (1யோவா. 2:25).**

இந்த நித்திய ஜீவன் பற்றிய அவசியத்தை இயேசு ஆண்டவர் எவ்விதம் எடுத்துரைக்கிறார் என்று பாருங்கள். **அழிந்து போகிற போஜனத் திற்காக அல்ல நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கிற போஜனத்திற் காகவே கிரியை நடப்பியுங்கள். அதை மனுஷ குமாரன் உங்களுக்கு கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்** என்றார் (யோவா 6:27). என்றென்றும் அழியாத இந்த நித்திய ஜீவன், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தினாலே வருகிறதென்பதை அறிந்து, நாம் ஒவ்வொருவரும் அவருக்குப் பயந்து அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்போமாக!

## III கர்த்தருக்குப் பயப்படுவதால் கேட்கப்படுகிறோம்

"நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" என்ற வசனம் தொட்டு நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கர்த்தருக்குப் பயப்படுவதால் நாம் கேட்கப்படுகிறோம் என்பது.

தேவனில் நம்பிக்கை வைத்து வாழும் அநேகருக்கு அடிக்கடி வரும் கேள்விகளுள் ஒன்று, ஏன் என் விண்ணப்பம், என் ஜெபம், என் வேண்டுதல் கேட்கப்படுவதில்லை என்பது. ஆனால், வேதாகமத்தைத் திறந்து கவனமாக வாசிக்கும்போது நமக்குத் தெரியும் உண்மை, தேவனுடைய பரிசுத்தவான்கள் அநேகருடைய ஜெபங்களை அவர் கேட்டிருக்கிறார் என்பது. நம்முடைய பரலோக தேவனைப் பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் உண்மை, அவர் **பட்சபாதமில்லாதவர்** என்பது (அப். 10:35; ரோமர் 2:11). அப்படியானால், ஜெபம் கேட்கப்படாமலிருப்பதற்குக் காரணம் ஒருபோதும் தேவனாக இருக்க முடியாது.

நீதிமொழிகள் நூலிலேயே ஜெபம் பற்றி ஆவியானவர் வெளிப்படுத்தும் கருத்தைப் பாருங்கள். துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம் (நீதி. 15:18). இன்னும், நீதி. 28:9-ஐக் கவனித்தால் அது நமக்கு எச்சரிப்பாக அமையும். **வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது.** ஜெபம் கேட்கப்படாமல் போவது எதனால் என்பது இப்பொழுது நமக்கு விளங்க வேண்டிய அளவுக்கு விளங்கியிருக்கும் என நம்புகிறேன்.

சரி, ஜெபங்கள் கேட்கப்படாமல் போவதற்கு மேற் சொன்னவைகள் காரணங்களாக இருந்தாலும், ஜெபங்கள் எப்பொழுது கேட்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமாக இருக்கும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் நமக்குப் புதிய ஏற்பாட்டில் உண்டு. எபிரெய ஆசிரியர், நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் ஜெபங்கள் எப்படிக் கேட்கப்பட்டது என்று கூறி, நாமும் அப்படி ஜெபிக்க நம்மை ஊக்கப்படுத்துகின்றார். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்து, **தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு...** என்கிறார் (எபி. 5:7).

இயேசுவின் ஜெபம் இங்கே கேட்கப்பட்டுள்ளது எதனால்? எபிரெய ஆசிரியர் என்ன கூறுகிறார்? பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார். ஒரு பாவமும் அறியாத இயேசு ஆண்டவருக்கே ஜெபம் கேட்கப்படுவதற்குப் பயமும், பக்தியும் அவசியமானால், அன்றாடம் பாவத்திலும், பாவ சிந்தனையிலும் திளைத்திருக்கும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு அது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள்! அப்படியானால், நம்மிடத்திலே தேவனைப் பற்றிய பயமும், பக்தியும் காணப்படுகிறதா? சொல்லுங்கள்.

இயேசு ஆண்டவரின் ஜெபம் ஏன் கேட்கப்பட்டது என்று கூறும் எபிரெய ஆசிரியர் அதற்குக் காரணம், பயபக்தி என்று மாத்திரம் கூறிவிடாமல் அந்த பயபக்தி அவரை எதற்கு வழிநடத்தினது என்றும் கூறியுள்ளார். அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு... என்று (எபி. 5:8). ஆம், இயேசுவுக்கிருந்த **பயபக்தியானது** அவரைக் **கீழ்ப்படிதலுக்கும் வழிநடத்தியுள்ளது.** அவர் கேட்கப்பட்டதற்கு, பயபக்தியோடு கீழ்ப்படிதலும் ஒரு பலமான காரணமாய் இருந்துள்ளது. இந்தக் கீழ்ப்படிதலின் அவசியம் குறித்து, சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு ஆவியானவர் கூறும் போது, அதற்குச் சாமுவேல், **கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களுக்கும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தாலும் உத்தமம்** (1சாமு. 15:22) என்கிறார்.

ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு வேறு சில காரணங்களும் உண்டென்பதை நாம் தெரிந்து கொள்வது நல்லது. இயேசுவானவர் ஒருசமயம், நீங்கள் **விசுவாசமுள்ளவர்களாய்** ஜெபத்திலே எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளெல்லாம் பெறுவீர்கள் என்றார் (மத். 21:22). யோவான் அப்போஸ்தலன், நாம் எதையாகிலும் **அவருடைய சித்தத்தின்படி கேட்டால்** அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதை அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (1யோவா. 5:14) என்கிறார்.

ஆக, வெற்றியாகவும், சமாதானமாகவும் இப்பூமியின் வாழ்க்கையில் நாம் நம்மை நடத்த தேவ ஒத்தாசை தேவை. அந்த தேவ ஒத்தாசை ஜெபத்தினாலே கிடைக்கும். அந்த ஜெபம் பயபக்தியினாலும், வேறுசில தேவ பண்புகளாலும் கேட்கப்படும். ஆகவே, இவ்வுண்மைகளை அறிந்து நாம் அதற்கேற்ற வாழ்க்கையை நடத்த வேண்டும்.

அருமையானவர்களே, நாம் நாள்தோறும் கர்த்தருக்குப் பயந்து வாழ்வது அவசியம் என்பதையும், அது இம்மைக்கும், மறுமைக்கும் உண்டான ஆசீர்வாதங்களை வருவிக்கத்தக்கதென்றும் தெரிந்து கொண்டோம். ஆகையால், கடந்த காலங்கள் எப்படியிருந்தாலும், இப்பொழுது முதல் கர்த்தருக்குப் பயப்படும்படியான ஒரு தீர்மானம் எடுத்து அதை நம் அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவோம். அப்படிச் செய்ய பரலோக தேவன் உங்களுக்கு ஒத்தாசை செய்வாராக! ஆமென்.

***EZS ராஜநாயகம்***

# தேவனுடைய ஜனங்களின் உண்மைத்தன்மை

உண்மையாயிருப்பது என்பது அநேக காரியங்களை குறிப்பாகச் சொல்லுகிறது. அதன் அர்த்தம் என்னவென்றால் நம்பத்தகுந்தவர், நாம் அவரை சார்ந்திருக்க முடியும், நாம் அவரிடம் எதை எதிர்பார்க்கிறோமோ அதை தொடர்ந்து செய்யக்கூடியவர். ஒருவர் இப்படியாகச் சொன்னார் ஒருவர் உண்மையுள்ளவராயிருந்தால் அவர் என்ன செய்வார் என்பதை நாம் முன்னறிவிக்க முடியும். அதாவது, தேவன் எவைகளை அவர் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை அவர் செய்யப்போகிறார் என்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். மறுமுனையில், அவர் மோசமான காரியங்களையோ, தவறான காரியங்களையோ செய்யமாட்டார் என்றும் நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். இப்படிப்பட்டவர்கள் வளர்ச்சி அடைந்து நாம் எப்போதுமே அவர்கள் மேல் நம்பிக்கை வைக்கக் கூடிய அளவுக்கு அவர்கள் சொல்கின்ற, செய்கின்ற எல்லா காரியங்களிலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து நீண்ட காலமாக கர்த்தருக்கு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். நல்ல திருமணங்களில் இவ்விதமாகத்தான் இருக்கிறது. கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவ ராயிருக்கிறார்கள். ஒருவரைப் பற்றி மற்றவருக்கு ஒருபோதும் எந்தவித சந்தேகமும் இருக்காது. அவர்கள் ஒருவரிலொருவர் முழுமையான நம்பிக்கை உடையவர்களாய், உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இப்படி இருப்பது ஒரு அற்புதமான நிலையாகும்.

அதைப் போலவே, தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அப்படியே கிறிஸ்துவையும் சொல்ல முடியும். பவுல் சொல்லும் போது “தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்” என்று கூறுகிறார் (1கொரிந்தியர் 1:9). மறுபடியும் பவுல், மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார், என்று சொல்லுகிறார் (1 கொரி. 10:13). எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொன்னார். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியா யிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக் கிறாரே (எபிரெயர் 10:23). 1 பேதுரு 4:19ல் நாம் தேவனை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாக வாசிக்கிறோம். மேலும் 1 யோவான் 1:9ல் நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும்

உள்ளவராயிருக்கிறார் என்று நாம் சொல்லப்பட்டிருக்கிறோம். கர்த்தர் தமது வாக்குதத்தத்தைக் குறித்து தாமதமாயிரார் என்று நாம் சொல்லப்பட்டிருக்கிறோம் (2பேதுரு 3:9). அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை என்றும் (எபிரெயர் 13:5) உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர் நம்முடனே கூட இருப்பதாகவும் நாம் சொல்லப்பட்டிருக்கிறோம் (மத்தேயு 28:20).

நாம் தேவனுக்குள் விசுவாசிகளாகும்போது, தேவனுடைய குமாரனாயிருக்கிற கிறிஸ்துவுக்கு நாம் கீழ்ப்படியும்போது, அவர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். (மாற்கு. 16:16; அப். 2:38; அப். 2:47). நாம் அதைச் செய்யும்போது கர்த்தருக்கு நம்மை நாம் அர்ப்பணித்து விடுகிறோம். நாம் இப்படியாகச் சொல்கிறோம். "கர்த்தாவே, இப்போது நான் உம்முடையவன். என் மனம், ஆத்துமா, ஜீவியம் முழுவதையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். நீர் எனக்கு கர்த்தரும், எஜமானுமாயிருப்பீர். ஆகவே, நான் மரணபரியந்தம் உமக்கு உண்மையுள்ளவனாகவும், உம்மிடத்தில் விசுவாசமுள்ளவனாகவும் இருப்பேன்" கர்த்தரைப் பொறுத்தவரை அவர் இதைத்தான் எதிர்பார்க்கிறார். பவுல் சொல்லும்போது, "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று சொல்லுகிறார்"(ரோமர் 12:1,2). யாக்கோபு "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" என்று சொல்கிறார் (யாக்கோபு 1:25). யோவான் இப்படியாக எழுதினார், "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும், அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:14). கிறிஸ்து "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத்தருவேன்" என்று சொன்னார் (வெளி. 2:10).

கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சபையின் அங்கத்தினராகவும் நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாயிருக்கிறோம். கிறிஸ்து மணவாளனாயிருக்கிறார். நாம் ஏற்கனவே பார்த்தபடி, கிறிஸ்து எப்போதுமே தன் மணவாட்டியிடம் உண்மையுள்ளவராயிருப்பார். ஆனால், மணவாட்டி எப்படி? தன் மணவாட்டி தன்னிடம் உண்மையாயிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எபேசியர் ஐந்தாம் அதிகாரத்தில் பவுல், ஒரு கணவனும், மனைவியும் திருமணத்தில் கொள்கிற உறவை படம் பிடித்துக் காட்டுகிறார். கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள ஒற்றுமைகளைக் காட்டுகிறார். பவுல்

இப்படியாகச் சொல்கிறார். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அந்தத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூரவேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்பு கூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபேசியர் 5:23-30).

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர்களுக்கு எழுதும்போது "அப்படிப் போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் என்று எழுதுகிறார்" (ரோமர் 7:4). இங்கே பவுல் அவர்களை நியாயப் பிரமாணத்தை விவாகம் பண்ணினவர்களாகக் காட்டுகிறார், அதாவது நியாயப்பிரமாணம் அவர்களைக் கட்டுப்படுத்தினவரை அவர்கள் அதைக் கைக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டனர். ஆனால், அது அவர்களிடமிருந்து நீக்கப்பட்டபோது அல்லது எடுபட்டுப்போனபோது அது அவர்கள் வேறொருவரை திருமணம் செய்ய சாத்தியமாக்கியது. வேறு விதமாகச் சொன்னால் கிறிஸ்தவர்களாகவும், சபை அங்கத்தினர்களாகவும் கிறிஸ்துவின் மணவாட்டியாகவும் இருந்து கொண்டு அப்போது அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக கிறிஸ்துவுடன் விவாகம் பண்ணப்பட்டார்கள். இந்தக் காரியம் இன்றைய நாட்களிலும் அப்படியே உண்மையாயிருக்கிறது. இன்றைய நாட்களில் திருமணத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது? இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறார்கள். எனவே, நாம் கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

நம்முடைய உண்மைத்தன்மை பெரும் பரப்பளவைக் கொண்டுள்ளது. அதாவது, நாம் கர்த்தரிடத்தில் அவரைப் பற்றும் அன்பில் உண்மையுள்ளவர் களாய் இருக்க வேண்டும். கர்த்தரிடத்தில் பக்தியாயிருப்பதில் உண்மையுள்ள

வர்களாய் இருக்கவேண்டும். இயேசு சொல்லும்போது, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழுஇருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக என்று சொன்னார் (மத்தேயு 22:37). நாம் கர்த்தரிடத்தில் அவருடைய உபதேசத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். யோவான் இப்படியாகக் கூறுகிறார். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடைய வனல்ல, "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருககிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன். (2யோவான் 9). அதாவது, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியங்கள் மட்டுமே விசுவாசிக்கவும், பிரசங்கிக்கவும், போதிக்கவும் வேண்டும். நாம் அதோடு ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது. அதற்கு பதிலாக ஒன்றையும் உபயோகப் படுத்தவும் கூடாது". (வெளி. 22:18,19; கலாத். 1:6-9).

நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய ஆராதனையிலும், வேலையிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும்படி ஒன்றுகூட வேண்டும். (அப்போ. 20:7). எபிரெய ஆசிரியர் இப்படியாக நம்மிடம் சொல்கிறார், "சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வள வாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்கு தலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்". (எபிரெயர் 10:25-27). பவுல் நாம் எப்பொழுதுமே கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். (1கொரிந்தியர் 15:58). நாம் நல்ல கனிகளைக் கொடுக்க வேண்டுமென்று கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிறார் (யோவான் 15:8).

நம்முடைய ஒழுக்கமான வாழ்க்கையில் நாம் கர்த்தரிடத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். பவுல் இப்படியாகக் கூறுகிறார் "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்". (கொலோ 3:17).

உண்மையுள்ளவர்களுக்கு பரலோகத்தில் வீடு பலனளிக்கப்படும் (யோவா. 14:1-3).

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# இருபாலரும் கூடியுள்ள இடத்தில் ஒரு பெண் பிரசங்கிக்க முடியுமா?

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான சபைப் பிரிவுகளின் ஆராதனைகளில், பெண்கள் முக்கியப் பங்கேற்று செயல்படுகின்றனர். இப்படிச் செய்வதற்கும் அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் காரணம், பெண்கள் தாழ்ந்தவர்களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் கருதப் பட்ட, அந்தக்கால வேதாகம நாட்கள் கடந்து போய்விட்டதென்றும் இப்பொழுது ஆண்கள் செய்யும் எதையும் செய்வதற்கு இவர்களுக்கும் உரிமையுண்டு என்றும் எண்ணுவதுதான். எப்படியோ காலங்காலமாய் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எடுத்துப் போடப்பட்டுவிட்டது என்று எண்ணி, இப்புதிய சித்தாந்தத்தில் அநேகர் திளைக்கின்றனர். இதனால், இப்பொழுதெல்லாம் பெண்கள் பிரசங்கிக்கின்றனர். பேராயர்களாக ஏற்படுத்தப்படுகின்றனர். ஆண்கள் அணியும் அங்கிகளை தாங்களும் அணிந்து, ஆண்கள் செய்யும் வேலைகளையும் செய்கின்றனர்.

இப்புதிய சுயாதீனக் கொள்கை தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக் கிறதா? வேதாகமத்தின் கொள்கைகள், அது எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு காலத்துக்கும், அதற்கு முந்திய காலத்துக்கும் மாத்திரம் பொருந்தக் கூடிய கோட்பாடுகளைக் கொண்டதா? இது தேவச் சித்தத்தின் படியானதாக கொடுக்கப்படாமல் உண்மையாகவே மனிதனிடத்திலிருந்து வந்த வார்த்தையாக இருக்குமானால் நம்மையும் அறியாமல் பழங்காலக் கொள்கைகளினால் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம் என்பது பொருள். ஆனால், வேதவாக்கியங்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டதாய் இருந்து அது மனிதனுக்காக தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக இருக்கு மானால், எந்த ஒரு மனிதனும் அதை காலத்துக்கு ஒவ்வாதது என்றும், இக்காலத்துக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவனாய் இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவானவர் கூறுகையில், **என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக் கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12:48) என்கிறார். மேலும் மத். 16:19ல் **பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்** என்றார். வேத வசனங்களெல்லாம் தேவனுடைய வார்த்தைகள் தான். அவைகள் மனிதனின் கோட்பாடுகள் அல்ல. "வேதவாக்கியங்களெல்லாம்

தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோத். 3:16). வேதாகமத்தை எழுதி முடிக்கிற தருவாயில் தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பைப் பாருங்கள். இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார் (வெளி. 22:18,19).

தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கையாளுவதென்பது சாதாரண விஷயமல்ல. அவர் எழுதினதிலிருந்து, தனக்கு அதிகாரமிருக்கிறது என்ற எண்ணத்தில் தன்னை தேவனுக்கு மேலாக எண்ணி, எழுதப்பட்டதற்கு விரோதமாக எதையாவது ஒருவன் மாற்றினால், அது அவனுக்கு அழிவைத் தான் கொண்டு வரும். அப்போஸ்தலனாகிய பவுல் (கலா. 1:8) வசனப் பகுதிகளில் **"வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கடவன்" என்கிறார்.** இப்படித் துணிகரமாக அதிகாரத்தை தங்கள் கையில் எடுக்கும், ஆணும், பெண்ணும், நியாயத்தீர்ப்பின் நாளில் ஆக்கினையை சந்தித்தாக வேண்டும்.

**இயேசு ஆராய்ச்சி மாநாடு என்பது, வேதப் படிப்பில் "அதிகாரம் பெற்றவர்கள்" என்றும், மத உலகில் தங்களை "தலைவர்கள்" என்றும் அழைத்துக் கொள்ளும் ஒரு கூட்டத்தார். சுவிஷே உண்மையை ஆராய்ச்சி செய்த நிகழ்வு பற்றி ரசல் ஷோர்டோ என்பவர் ஒரு கட்டுரை எழுதினார். அவர் சொல்லும் போது, "இயேசு ஆராய்ச்சி மாநாட்டினர்" சுவிசேஷத்தை ஒவ்வொரு வார்த்தையாக ஆழ்ந்து ஆய்வு செய்கின்றனர், இப்படிச் செய்வது தன்னில் தானே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சுவிசேஷத்தில் உள்ள எந்த வார்த்தைகளும், எந்த நிகழ்வும் வரலாற்றில் தோன்றிய இயேசுவுக்குச் சொந்தமானது என்று இவர்கள் கூடித் தீர்மானிப்பது இவர்களுடைய துணிகரமான செயலை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவர்கள், இப்படித் தீர்மானிப்பதின் மூலம் இயேசுவுக்குச் சொந்தமான வார்த்தைகளும், நிகழ்வுகளும் எதுவென்று சொல்லுகிறார்களோ அதைத் தவிர மற்ற வேத பகுதிகள் எல்லாம் "கதை சொல்பவர்களால்" கூட்டப்பட்டது என்று கருதப்படுகிறது என்கிறார் இவர்.**

பிரிவினைச் சபையில் இருக்கும் பிரசங்கியார்கள் மற்றும் தலைவர்களிடையே இருக்கும் இப்படிப்பட்ட மனோநிலை தான், பொதுவாக ஜனங்கள் வேதாகமத்தைக் குறைவாக மதிப்பிட்டு, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் நடத்தையைக் குறைத்துக் கொண்டு, தங்களுக்குத் தற்கால காலாச்சாரமே போதும் என்று நினைத்து அதை நாடுகின்றனர்.

தன்னுடைய ஜனங்களை வழிநடத்தும்படியான பொறுப்பை, தேவன் மனிதனுடைய கற்பனையான உபதேசங்களுக்கு ஒரு போதும் விட்டு விடவில்லை. அவர் நேரிடையான கட்டளைகளை தெளிவாக வெளிப் படுத்தி, அதை எழுதிக் கொடுத்து, இன்றைக்கு நாம் பயன்படுத்தும்படி பாதுகாத்து வைத்திருக்கிறார். ஆகவே, நமது ஆவிக்குரிய காரியங்களுக்கு வேதமே வழிகாட்டியாக அமைய வேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில், பிரசங்கித்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் கூட கொடுக்கப்படவில்லை. அநேகப் பெண்கள் இயேசுவுக்குப் பின்சென்று, அவருக்கும், அவருடைய அப்போஸ்தலருக்கும் ஊழியம் செய்வதன் மூலம் அவர்களுடைய சில தேவைகளை சந்தித்தார்கள். ஆனால், அவர்களில் ஒருவர் கூட போதிப்பதற்கென்று நியமிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில், எழுபது பேரை தெரிந்தெடுத்து அனுப்பும்போது, ஆண்களைத் தான் தெரிந் தெடுத்தாரே தவிர பெண்கள் ஒருவர் கூட இல்லை. அப்போஸ்தலர்களை எடுத்துக்கொண்டால் அவர்களும் ஆண் களாகத் தான் இருந்தார்கள். பதினோரு பேருடன் பேதுரு எழுந்து நின்று பிரசங்கித்த சம்பவத்திலும், எந்த ஒரு பெண்ணும் போதித்ததாகக் கூறப்படவில்லை.

மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு, வல்லமையான சாட்சி திட்டமாக இருந்தது. மகதலேனா மரியாளை எடுத்துக் கொண்டால். அவள் இயேசு கிறிஸ்துவால் அற்புதமாய் குணப்படுத்தப்பட்டவள். அத்தோடு இயேசுகிறிஸ்துவின் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தபோது, முதன் முதலாக அவளுக்குத்தான் காட்சியளித்தார். மாற்கு 16:14லில் அவிசுவாசத்திற்காக கடிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களை விட, இந்த காலகட்டத்தில் இவள் மகத்தான விசுவாசம் உடையவளாக இருக்க வாய்ப்பிருந்தது. ஆனால், இவர்கள் இருவரில், ஒருவருக்காகிலும் போதிக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இயேசுவுக்கு மிகவும் பிரியமானவர்களாயிருந் தார்கள். மரித்துப்போன தங்கள் சகோதரனாகிய லாசருவை இயேசு கிறிஸ்து உயிரோடு எழுப்பியபோது, அதுபற்றி மற்றவர்களை நம்பச் செய்யும் படியாக எதுவுமே பேசவில்லை. இயேசு கிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ அவர்களை அவ்வாறு பேசும்படியாக கேட்டுக் கொள்ளவுமில்லை.

ஏன்? ஏனென்றால், சமுதாயத்திலாகட்டும், குடும்பத்திலாகட்டும். சபையிலாகட்டும். பெண்களின் பங்கு, ஆண்களின் பங்குகளிலிருந்து வேறுபட்டுள்ளது. பொது இடங்களில் சுவிசேஷத்தைப் பற்றி உத்தரவு சொல்லவும், கேட்கிறவர்கள், மனமாற்றமடைந்து, மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவில் தைரியமாய் பிரசங்கிக்கவும் ஆண்களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெண்களைப் பற்றிப் பார்க்கும்போது, அவர்கள் அமைதியாய் இருந்து கற்றுக் கொள்ளகடவர்கள் என்று போதிக்கிறது. சபைகளில் உங்கள் ஸ்தீரிகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே

சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. (1கொரி. 14:34,35).

அன்றியும், புருஷர்கள் (கிரேக்கத்தில் ஆண்கள்) கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும், மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலைறேப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும் தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்ற படியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிற தில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப் பட்டாள், மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்ப்பட்டாள். (1தீமோ. 2:11-14).

இங்கே, ஆதியிலிருந்து, ஆணோடு பெண்ணுக்கிருக்கும் உறவு சம்பந்தமான இரண்டு கருத்துக்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மனதைக் கொண்டு செல்வதை கவனியுங்கள். முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். இரண்டாவது, ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளோ வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் என்பது.

மீண்டுமாகப் பார்த்தால், பெண்ணினம் சாத்தானுக்கு தொடர்ந்து செவி கொடுத்தே வருகிறது. அன்று, ஆதாம் பெலவீனமுள்ளவனாயிருந்து ஏவாளுடைய பாவத்துக்குத் துணை போனது போல, இன்றும் ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தவறு செய்கிறார்கள். ஆகையால், பெண்கள் தான், பிரசங்க மேடைகளில் நின்று பிரசங்கிக்கிறார்கள். தங்களைப் பிரசங்கிக ளென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கின்ற சில பெண்களை கவனித்துப் பார்த்தால் பெரும்பாலானவர்கள் தாங்கள் அளிக்கும் செய்தி களிலும், தங்கள் உடைகளிலும், தங்கள் பேச்சுக்களிலும் தீவிரத் தன்மை யுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது, அத்துமீறி செயல்படு கிறார்கள். சமீபத்தில், தங்களைப் பெரியவர்கள் என அழைத்துக் கொள்கிற இரண்டு பெந்தெகொஸ்தே ஊழியக்காரிகள். தங்கள் தலையில் பொய் முடி அலங்காரம் செய்து, மிகப் பெரிய உடை அணிந்து, படோடாபமாய் தங்கள் முகத்தை அலங்கரித்து, விலையுயர்ந்த நகைகளை அணிந்திருந்தார்கள். ஏவாளுடைய முன் மாதிரியைப் பின்பற்றி, தேவன் பெண்களுக்கென சொல்லியிருக்கிற புத்திமதிகளுக்கு துளியும் செவி கொடுக்காமல் நடந்து கொண்டால், நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கு இவர்கள் சரியான உதாரணம்.

இல்லவே இல்லை. பெண்கள் பிரசங்கிக்கும்படி தேவனால் அதிகாரம் பெறவேயில்லை.

**தமிழில் : ரேச்சல்நாயகம்**

வாலிபர் பகுதி

# நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?

அன்பார்ந்த வாலிப நெஞ்சங்களே! உங்களை மறுபடியும் இந்தக் கட்டுரை வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பிரியமானவர்களே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் நூற்றுக்கணக்கான சீஷர்கள் அவருக்கு இருந்திருக்கிறார்கள். (லூக்கா. 10:1)ல் அவருக்கு எழுபது சீஷர்கள் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். இயேசுவின் சீஷரில் அநேகர் அவர் கடினமான உபதேசத்தைச் செய்கிறார் என்று சொல்லி, அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். அப்பொழுது இயேசு மீதமிருந்த பன்னிருவரையும் நோக்கி **நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?** என்று கேட்டார். இயேசு எவ்வளவு மனமுடைந்தவராய் இந்தக் கேள்வியை கேட்டிருக்கக் கூடும் என்று நீங்கள் சற்று கற்பனை செய்து பாருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், பிற்காலங்களில், சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று எழுதினார், "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்" (1தீமோத்தேயு 4:1). யோவான், சிலர் பிரிந்து போய் விட்டதாக எழுதினார், "அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை, நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே எல்லாரும் நம்முடையவர்களல்ல வென்று வெளியாகும் படிக்கே பிரிந்து போனார்கள்" (1யோவான் 2:19). இன்னும் பின் வாங்கிப் போனவர்களைப் பற்றிய உதாரணங்கள் பெயர்களுடன் தரப்பட்டிருக்கிறது: "இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத் தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாத படி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுத்தேன்" (1தீமோத்தேயு 1:19,20).

**நீங்களும் போய் விட மனதாயிருக்கிறீர்களோ?** என்று இயேசு கேட்ட இந்த காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். இது எவ்வளவு சோககரமான காட்சி பாருங்கள். ஏன் சீஷர்கள் அவர்களுள் அநேகர் இயேசுவோடு அநேக மாதங்கள் இருந்திருந்தாலும், அவரை விட்டு விலகி பின்வாங்கிப்போனார்கள்? அதே கேள்வி இன்றும் கேட்கப்படுகிறது. கிறிஸ்துவின் சீஷர்கள் இன்னும் அவரை விட்டு விலகிச் சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்?

கிறிஸ்து நமக்கு செய்திருக்கிறவைகளை எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி அவரை விட்டு விலகிச் செல்ல முடியும்?. அவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். "என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). நாம் அவரை விட்டு விலகிச் சென்றால், "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இல்லை" (எபிரெயர் 10:26). ஆனாலும் சிலர் அவரை விட்டு பின்வாங்கிப் போகிறார் கள். பின்வாங்கிப் போகிறவர்களைப் பற்றி தேவன் சொல்லும் போது "ஒருவன் பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது" என்று சொல் கிறார் (எபிரெயர் 10:38) கிறிஸ்து அவர்களுக்கு செய்தவைகளையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு நன்றி கெட்டவர்களாய் அவரை விட்டு விலகிச் செல்கிறவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று நாம் பார்ப்போம்.

**I. சிலர், மறுபடியும் தங்கள் பாவ வாழ்க்கைக்குச் செல்கிறார்கள் :**

இயேசு கிறிஸ்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வந்தார், ஆனால், சிலர் அவரை விட்டுவிட்டு மறுபடியும் அந்த பாவ வாழ்க்கைக்குள் செல்கிறார்கள். "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" என்று எபிரெய ஆசிரியர் பின்வாங்கிப் போகிறவர்களை எச்சரிக்கிறார், (எபிரெயர் 3:12). கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது (எபேசியர் 2:5). ஆனால், சிலரைப் பார்த்து வேதாகமம் கிருபையினின்று விழுந்தீர்கள் என்று சொல்கிறது (கலாத்தியர் 5:4). எனவே தான், தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிக்கக்கடவன் (1கொரிந்தியர் 10:12) என்று எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.** அதென்னவென்றால் என்ன ஆனாலும் நாங்கள் அவரையே பின்பற்றுவோம் என்கிற தீர்மானம் தான் அது! அதில் நாம் அசையாதவர்களாய் உறுதியாய் இருக்க வேண்டும், ஏனென்றால், இயேசு இப்படியாகச் சொன்னார். "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" (மத்தேயு 12:30). மேலும் 2கொரிந்தியர் 5:14,15 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை கவனியுங்கள். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்". அப்போஸ்தலனாகியப் பேதுரு கிறிஸ்துவை விட்டு விலகிப் போகிறவர்

களைப் பற்றி சொல்லும்போது, "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்குச் சம்பவித்து", என்று சொல்கிறார் (2பேதுரு 2:21,22). பாவத்திலிருந்து கழுவப்பட்டு, பின்பு கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து பாவ வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்புவது, கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போலாகும்.

**II. சிலர் உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச் செல்கிறார்கள் :**

ஒருமுறை நம்முடைய அருமை இரட்சகர் ஒரு கேள்வியைக் கேட்டார் அந்தக் கேள்வி (மத்தேயு 16:26)ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதோ அந்தக் கேள்வி "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" சில நித்திய ஐசுவரியத்தின் வாக்குத்தத்தங்களில் திருப்திப்படாமல், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து, இந்த அழிந்து போகின்ற உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச் சென்று விடுகிறார்கள். யூதாஸைப் போல முப்பது வெள்ளிக்காசுக்காக அவர்கள் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். இயேசு இப்படியாகச் சொன்னார். "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:19-21). ஆனால், சிலர் இந்த உலகத்தின் ஐசுவரியம், அதிகாரம், கௌரவம், சந்தோஷம் போன்றவைகளுக்காக நம்முடைய அருமை இரட்சகரை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள்.

**III. சிலர் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திற்குள் செல்கிறார்கள்:**

சாத்தானுடைய மிக வல்லமையான பிரசங்கம் என்னவென்றால் "எல்லா சபைகளும் ஒன்றுதான்" என்பதாகும். கிறிஸ்து ஒருபோதும் அப்படிச் சொன்னதில்லை, அப்படி அவர் ஒருபோதும் போதிக்கவும் இல்லை. இயேசு "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று சொன்னார் (மத்தேயு 16:18). அந்தச் சபையை, அவர் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்தார் (அப்போ. 20:28). சாத்தான் மக்கள் மனதில் எப்படி வேண்டுமானாலும் இரட்சிக்கப்பட முடியும், எல்லா சபைகளும் ஒன்று தான் என்கிற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கிறான். இயேசு கட்டின அவருடைய சபையை, இந்த உலகத்திலுள்ள

எல்லா மார்க்கப்பிரிவினை சபைகளும் சேர்ந்து எதிர்க்கின்றன. எபேசியர் ஐந்தாம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை பவுல் ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள உறவாக அருமையாக வர்ணனை செய்திருக்கிறார். சபையாகிய மணவாட்டியை மணவாளனாகிய இயேசு விவாகம் செய்திருக் கிறார். எனவே, கிறிஸ்துவுக்கு சபையாகிய ஒரே மணவாட்டிதான் இருக்கிறது.

பிரிவினையே இருக்கக்கூடாது என்று இயேசு ஜெபித்தார்; "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக் கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:20,21). அநேகர் எல்லா சபைகளும் ஒன்று தான் என்று நினைத்து கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து மார்க்கப் பிரிவினை கூட்டத்திற்கு சென்றுவிடுகிறார்கள். மார்க்கப் பிரிவினைக் கூட்டம் விசுவாசிகளைப் பிரிக்கிறது, பிரிவினைப்பாவமாகும் (கலாத்தியர் 5:20).

**IV. சிலர் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து நம்பிக்கையற்றுச் செல்கிறார்கள்**

கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார் (கொலோசெயர் 1:27). எனவே கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்பவர்கள் நம்பிக்கை அற்றுப்போகிறார்கள். (எபிரெயர் 10:26-31) வசனங்களில் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து செல்லும் ஒருவரின் நிலை படம்பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்வது என்பது இரட்சிப்பை விட்டுவிட்டு செல்வது, **தேவனை விட்டுப் பிரிந்து செல்வ தாகும்.** கிறிஸ்து இல்லாமல் நாம் பரலோகத்தில் பிரவேசிப்பது கூடாத காரியம். கிறிஸ்துவிலும், அவருடைய இரத்தத்திலும் மட்டுமே நமக்கு நம்பிக்கை இருக்கிறது. கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து செல்வது என்பது நித்திய ஜீவனை விட்டுப்பிரிந்து செல்வதாகும். அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும் போது "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்", என்று எழுதுகிறார் (1யோவான் 5:11). வாலிப நெஞ்சங்களே, இன்னும் கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் பார்த்து "**நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர் களோ?**" என்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார். அந்தக் கேள்விக்கு நீங்கள் எப்படி பதிலளிக்கப் போகிறீர்கள்? நித்தியம் காத்துக் கொண்டிருக் கிறது. சிந்தித்து செயல்படுங்கள்.

*பென்னி மார்ட்டின்*

சிறுவர் பகுதி

# தேவனுடைய அம்புகள்



எனதருமை சிறுபிள்ளைகளே, இந்த இதழின் வழியாக இந்த மாதமும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கடந்த மாதத்தின் பாடம் உங்களுக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும் என நம்புகிறேன். சரி, இந்த மாதம் தேவன் சிறுபிள்ளைகள் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை பற்றி பார்க்கப்போகிறோம். உண்மையாகவே தேவன் சிறுபிள்ளைகளை இவ்வளவு நேசிக்கிறாரா என்று தொடர்ந்து கீழே படிக்கும் பொழுது நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்! சரி, எப்படி என்று பார்க்கலாமா?

சரி, எல்லா மனுஷரும் ஒரு காலத்தில் இப்படியாக இருந்தார் என்று ஏதாவதொன்றை உங்களால் சொல்ல முடியுமா? ஆம், என்றால் அதற்கு பதில் குழந்தையாகத்தான் இருக்க வேண்டும். ஆம் தானே! யாராக இருந்தாலும் சரி, அவர்கள் குழந்தையாய் இருந்திருப்பார்கள். அவர்கள் தான் வாலிபர்களாகவும், பின்னர் வயதானவர்களாகவும் வளருகிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படை எது? குழந்தை பருவம். எனவே அது மிகவும் முக்கியம்.

ஒருநாள், இயேசு கிறிஸ்து குழந்தைகள் தன்னிடத்திலிருந்து விலக்கப்பட்டதை அறிந்து, மிகவும் வருந்தி விசனமடைந்து, சுற்றி நின்ற ஜனங்களை பார்த்து "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மாற். 10:14) என்று கூறினார்.

மேலும் மத் 18:4,6 "பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் என்றும். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" என்று எச்சரிக்கிறார். பாருங்கள் தேவன் "குழந்தைகளுக்கு" எவ்வளவு பெரிய இடத்தை கொடுத்திருக்கிறார்.

ஒருவேளை நாம் ஆச்சரியப்பட்டாலும், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் சங்கீதக்காரன் 127:3ல் பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கற்பத்தின் கனி அவருடைய பலன் என்று கூறுகிறான். வயதானவர்கள், பிள்ளைகள் தேவனால் பாதுகாக்கப்படுவதற்கு தங்களிடம் அனுப்பப்படுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதைத்தான் சங்கீதக்காரன் 127:5-ல் பலவான் கையில் உள்ள அம்புக்கு சமானம் என்கிறான்.

ஆம், குழந்தைகள் அம்புகளாக பரலோகம் என்ற குறிக்கு பெரியவர்களால் இயக்கப்படவேண்டும். பெரியவர்கள் அதாவது வயதானவர்கள் தேவனால் அம்புகளை எய்வதற்கு ஏற்படுத்தப்பட்டவர்கள்; குழந்தைகள் தேவனுடைய அம்புகள்.

நீதி : 29:15ல் தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான். பாருங்கள் எவ்வளவு உண்மையென்று, அதே ஆசிரியர் 13:24ல் பிரம்பைக் கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான். அவன் மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்.

குழந்தைகளுக்கு அன்பையும், ஒழுக்கத்தையும் சேர்த்து காட்டுவது அவசியம் எபே. 6:1ல் பிள்ளைகளுக்கு ஒரு கட்டளை! பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள் என்று; ஆனால், அதேயிடத்தில் 4ல் போதனைகளோடே வளர்க்க வேண்டும் என்று பிதாக்களுக்கு கட்டளை. பாருங்கள் சிறுபிள்ளைகள் மேல் தேவன் எவ்வளவு அக்கரை வைத்திருக்கிறார்!.

மிக முக்கியமான ஒரு காரியம், பிதாக்கள் கற்றுக் கொடுக்கும் போதனைகளை, கற்று கைக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் யோ. 14:15-ல் தேவன் எதிர்பார்ப்பது போல் அவருடைய கற்பனைகளை கைக் கொள்ளுகிறவர்களாய் இருப்போம்.

என்ன சிறுவர்களே! பார்த்தீர்களா, நாம் கெட்டு போய் விடக்கூடாது என்பதற்காக தேவன் எவ்வளவு அக்கரையாய் இருக்கிறார்! இப்படி நம்மேல் அன்பு வைத்திருக்கும் தேவனுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம். சந்தித்து பார்த்தால் அவருடைய கற்பனையை கைக் கொண்டு, தேவனுக்கும், பெற்றோரும் பயந்து வாழ்வது மட்டுமே ஒரே வழி. என்ன! செய்வதற்கு தயாராகிவிட்டீர்ளா! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!.

**R.A.R. NAYAGMA.**

## நாளும், நடப்பும்

1. **மலைச்சிகரங்களில் உள்ள பனி உருகுவதால் உலகில் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்படுவர். ஐநா அறிக்கை தகவல்.**
2. **இந்தோனேசியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 24 சிறு தீவுகள் மறைந்துவிட்டன.**
3. **கேரளத்தில் சிக்குன்-குனியா காய்ச்சலால் பலரும் அவதியுறுகின்றனர். தமிழகத்தில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரம்.**
4. கட்டாய ஹெல்மட் கெடுபிடி கிடையாது. முதல்வர் கருணாநிதி தகவல்.
5. உலகில் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் 17வது முறையாக ஏறி அப்பா ஷெர்பா சாதனை படைத்தார்.
6. ஆசிய - ஆப்பிரிக்க அணிகள் கிரிக்கெட்டில் ஆசிய அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

# தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட என்ற இவ்வசனத்தைக் கவனியுங்கள். "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30). இவ்வசனம் எப்படி இன்றைக்கு எனக்கும், உங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது?.

இந்த வசனம் என்ன சொல்லுகிறதென்பதைத் தெரிந்து கொள்ள என்னோடு சேர்ந்து இரண்டு முக்கிய கருத்துக்களைப் படியுங்கள்.

முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கிற முறை, ஏதோ விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை. மாறாக, புரிந்துகொள்ளுவதற்கு மிக எளிமையான முறையிலே தான் சொல்லப்பட்டிருக்கிறது!.

இரண்டாவது, நீங்களும், நானும் பரிசுத்த ஆவியானவரை எவ்வழிகளில் துக்கப்படுத்துகிறோம் என்பதை படிப்பதற்காக அழைக்கிறேன். இதைப் படிப்பதன் நோக்கம், பரிசுத்த ஆவியானவரைத் துக்கப் படுத்துவதை தவிர்ப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் தான்.

இப்பொழுது, இந்த இரண்டையும் விரிவாகப் பார்ப்போம்.

**முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் முறை விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை.**

1.கொரி. 13:8-10 வசனப் பகுதியில், தேவன் ஒன்றை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அற்புதங்களை ஓய்ந்து போகவும், ஒழிந்து போகவும் பண்ணுவேன் என்று சொல்லியுள்ளார். அத்தோடு, எப்போது அப்படி ஓய்ந்து, ஒழிந்து போகப் பண்ணுவேன் என்றும் சொல்லியுள்ளார். அது, முதல் நூற்றாண்டில் நிறைவாகிய புதிய ஏற்பாடு முழுமையான அளவில் வெளியாகும் போது நடக்கும் என்று.

அதைத்தான் தேவன் அப்படியே நிறைவேற்றினார். அதாவது, முதல் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடு முழுமையடைந்தவுடன், அற்புதத்தை முடித்து வைத்தார். ஆகவே, இந்த வசனப்பகுதியோ அல்லது புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியோ, இன்றைக்கு அற்புதம் இருக்கிறது என்பது பற்றி எதுவும் குறிப்பிடுவதுமில்லை.

எபே. 4:30 வசனமானது, விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடுவதில்லையென்றால், வேறு எதைக் குறிப்பிடுகிறது? இதன் பொருள் மிகவும் எளிமையானது. நானும் நீங்களும் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது! தேவன், நாம் அப்படி செய்வதை விரும்புவதில்லை.

இந்த வசனப் பகுதி, **பரிசுத்த ஆவி ஒரு நபர் என்றும்,** அவரை துக்கப்படுத்த முடியும் என்று சொல்லுகிறது. மத உலகில் சிலரால் போதிக்கப் படுவது போல, அவர் ஒரு ஆவி சக்தி அல்ல.

வேதாகமத்தின் பிற பகுதிகள், பரிசுத்த ஆவியானவர், தேவத்துவத்தின் ஒருவர் என்றும், தெய்வீகம் உடையவர் என்றும் தெளிவாக போதிக்கிறது. (மத். 28:19-ல் இயேசுவானவர், தன்னைப் பின்பற்றினவர்களுக்கு, நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார். பிதாவையும், குமாரனையும் போல இவரும் தெய்வீகத் தன்மையுடையவராக இருக்கிறார்.

IIகொரி. 13:14-ல், தேவன் அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் என்று குறிப்பட்டுள்ளதை மீண்டும் பார்க்கிறோம். இது அவருடைய தெய்வீகத்தை குறிப்பதாக உள்ளது.

ஆகையால், நாம் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் போது, நாம் தேவனை துக்கப்படுத்துகிறோம்.

வேதாகமத்தின் பிற பகுதிகளில், தேவனைத் துக்கப்படுத்துவது குறித்து விதவிமாக சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். உதாரணமாக, ஆதி. 6:5,6-ல், மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார் என்றுள்ளது. அன்பான நமது தேவன் மீது, அவர்களின் துன்மார்க்கச் செயல் என்ன பாதிப்பை ஏற்படுத்தியது? அவர் தமது இருதயத்திலே **விசனப்பட்டார்.**

ஏசாயா 43;23-ல், தன்னுடைய தீர்க்கனாகிய ஏசாயாவைக் கொண்டு தேவன் தன்னுடைய, கலக குணமுள்ள ஜனங்களிடத்திலே பேசினார். தேவன், உன் பாவங்களினிமித்தம் என்னைச் **சங்கடப்படுத்தி**, உன் அக்கிரமங் களினால் என்னை **வருத்தப்படுத்தினாய்** என்று கூறுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களின் மீதான, தேவனுடைய அன்பான கரிசனை ஏசாயா 63,9-ல் அழகாக விளக்கப்பட்டுள்ளது. வசனம் 10-ல், தேவன் அவர்களுக்கு நல்லவராக இருந்தும், அவர்கள் கலகம் பண்ணினார்கள் என்று பார்க்கிறோம். அவர்கள் அப்படிச் செய்ததினாலேயே, **பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்.**

சங். 78:40 சொல்லும் வல்லமையான வார்த்தைகளைக் கவனியுங்கள்.

தேவனுடைய ஜனங்கள் வனாந்தரத்திலே அவருக்கு கோபம் மூட்டினார்கள். அவாந்தர வெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள். இஸ்ரவேலர்கள் எப்படி வனாந்தரத்திலேயும், அவாந்தர வெளியிலும் அவருக்குக் கோபம் மூட்டி, விசனப்படுத்தினார்கள்? தேவனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள். விக்கிரக வணக்கத்திற்கு உட்பட்டார்கள். தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனார்கள். மற்றும், ஒழுக்க ரீதியாக பாவம் செய்து விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள்.

இன்னும் சங்கீதம் 95:7-11ல், தேவனுடைய ஜனங்களின் கலகம் பற்றியும், அதற்காக தேவன் என்ன செய்தார் என்பது பற்றியும் விவரிக்கப் பட்டுள்ளது. தேவன் அவர்களை பற்றி இவ்விதம் சொல்லுகிறார், அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள் என்றும், சோதித்தார்கள் என்றும், கலகம் செய்தார்கள் என்றும், வழுவிப் போகிற இருதயமுள்ளவர்க ளென்றும், தேவனுடைய வழிகளை அறியாதவர்களென்றும் கூறியுள்ளார்.

அவர்களைக் குறித்தான தேவனுடைய நிலையை தயவு செய்து கவனியுங்கள். தேவன் அந்த சந்ததியினிமித்தம் **விசனப்பட்டார், துக்கப் பட்டார்,** அத்தோடு, தன்னுடைய கோபத்திலே, என்னுடைய இளைப்பாறு தலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்றும் **ஆணையிட்டார்.**

தேவன் இன்னுமொரு செய்தியை, எசேக்கியேல் தீர்க்கனைக் கொண்டு தனது ஜனங்களுக்கு அனுப்பினார் எசே. 16:43-ல், அவர்கள் தனக்கு கோபம் மூட்டினதை தேவன் சொல்லுகிறார். அப்படிச் செய்ததினால், இதோ, நான் உன் வழியின் பலனை உன் தலையின்மேல் சுமரப் பண்ணுவேன் என்று தேவன் சொன்னார். வேறு வகையாக சொல்வதென்றால், நன்றியற்று, கீழ்ப்படியா மையினால் அவருக்கு கோபம் மூட்டினதற்கான விலையை அவர்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்.

மல்கியா தீர்க்கதரிசியின் நூல் 2-ம் அதிகாரம் 16,17 ஆகிய வனசங்களில், தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தைகள் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே, தேவன், மனைவியைத் தள்ளி விடுதலை வெறுக்கிறேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஏனெனில், இப்படிப் பட்டவன், கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடி துரோகம் பண்ணுகிறான். இந்தப் பாவத்தைப் பொறுத்தளவில் ஜனங்கள் குற்றமுள்ளவர்களாயிருந் தார்கள். ஆனால் அதுமாத்திரமல்ல!.

பொல்லாப்பைச் செய்கிறவன் எவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்றும் சொன்னார்கள். மேலுமாக தேவனுடைய நீதியைக் குறித்து கேள்வி யெழுப்பினார்கள்.

தேவனுடைய பதில் அதற்கு என்னவாக இருந்தது? அவர்களுடைய வார்த்தைகளினாலும் செயல்களினாலும் தேவனை வருத்தமடையச் செய்தார்கள்.

அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் சனகரீப் சங்கத்திற்கு முன்பாக ஸ்தேவனின் எழுச்சியான பேச்சை தேவன் எழுதிக் கொடுத்துள்ளார். வசனங்கள் 51-53ல், தைரியம் கொண்ட ஸ்தேவான், நீங்களும், உங்கள் பிதாக்களும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்றீர்கள் என்று குற்றப்படுத்தினான். எப்படி அவர்கள் அதைச் செய்தார்கள்?.

அவர்கள், செவிகளிலும், இருதயத்திலும் விருத்தசேதனமில்லாத வர்களாயிருந்து, வணங்காக் கழுத்துள்ளவர்களாயிருந்தார்கள். இதையே வேறுவிதமாகச் சொல்வதாக இருந்தால், அவர்கள் கடினமுள்ளவர் களாயிருந்து, தேவன் சொல்வதைக் கேட்க மறுப்பவர்களாயிருந்தார்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் துன்பப்படுத்தினார்கள். நீதி பரருடைய அதாவது, மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையை முன்னறி வித்த தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்கள். நீண்ட காலமாக எதிர்பார்க்

கப்பட்ட மேசியாவாகிய இயேசுவை ஸ்தேவானின் நாட்களில் வாழ்ந்தவர்கள் காட்டிக் கொடுத்து கொலை செய்தார்கள். பழைய பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமற்போனார்கள்.

இவ்வகையில், இந்த ஜனங்கள் பரிசுத்த ஆவியை எதிர்த்தார்கள். தேவன், எபிரேயர், நிரூபத்தின் ஆசிரியரைக் கொண்டு, வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களின் நிலையைச் சொல்லியுள்ளார். அவர்கள் பாவம் செய்ததாக தேவன் சொல்லியுள்ளார். அவர்கள் கீழ்ப்படியவில்லை.

தேவனுடைய ஜனங்கள் பாவம் செய்து, கீழ்ப்படியாமல் போனபோது, தேவன் என்ன செய்தார் என்பதை நாம் கற்றுக்கொள்வது அவசியம். நாற்பது வருடங்களாக தேவன் அவர்கள் மீது கோபமாயிருந்தார். அவர்கள் பிணங்கள் வனாந்திரத்திலே விழுந்து போயிற்று. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று, அவர் ஆணையிட்டார்!.

இப்பொழுது, மேற்கண்ட வசனப்பகுதியில் நாம் பார்த்ததை தொகுத்து கவனிப்போம். மனிதனுடைய பாவச் செயலினிமித்தம், தேவன் கீழ்க்கண்ட வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளார். **துக்கப்பட்டிருக்கிறார்** (எபே. 4:30ல் நாம் பார்த்தபடி) **தேவன் பாரப்பட்டிருக்கிறார். வருத்தப்பட்டிருக்கிறார். கோபம் மூட்டப்பட்டிருக்கிறார். கோபத்தால் நிறைந்திருக்கிறார். எதிர்த்து நின்றிருக்கிறார். கோபப்பட்டிருக்கிறார்.** சில செயல்களை **வெறுத்திருக்கிறார்.**

தேவனை இந்த விதமாகப் பாதிப்படையச் செய்த மனிதனின் செயல்களைக் கவனியுங்கள். துன்மார்க்கம், பொல்லாப்பு, பாவங்கள் அல்லது அக்கிரமம், கலகம், முணுமுணுப்பு, விக்கிரக ஆராதனை, கீழ்ப்படியாமை, ஒழுக்கக் கேடு, கடின இருதயம், தேவனை பரீட்சை பார்த்தல், இருதயங்களில் விலகிப் போகுதல், தேவனுடைய வழிகளை அறிய மறுத்தல், அருவருப்புகளைச் செய்தல், இளவயதின் நாட்களை நினையாதிருத்தல், வணங்காக் கழுத்து, இருதயத்திலும், செவியிலும் விருத்தசேதனமில்லாமை, தீர்க்கதரிசிகளை துன்புறுத்திக் கொலை செய்தல், இயேசுவைக் காட்டிக் கொடுத்து, கொலை செய்தல், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமை, மனைவியைத் தள்ளிவிடுதல், துரோகம் பண்ணுதல், பொல்லாப்பை நல்லது என்று சொல்லுதல் மற்றும் தேவ நீதியைக் கேள்வி கேட்டல்.

தேவன் பாதிப்படைந்ததோடு, அந்தச் செயல்களினிமித்தம், தேவன் என்ன செய்தார் என்று சொல்லுகிறார் என்பதைத் தயவாய் கவனியுங்கள். அவர்களுக்கு எதிராக அவர் ஒரு விரோதியானார்; அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார்; தன்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று, தன்னுடைய கோபத்திலே சொன்னார். அவர்கள் செய்கையின் பலனை அவர்கள் தலையின்மேல் திருப்பினார். அதாவது, எதை விதைத்தார்களோ அதை அவர்கள் கண்டிப்பாக அறுக்கும்படி பார்த்துக்கொண்டார்.

இப்பொழுது, அநேக வேத பகுதிகளைக் கொண்டு என்ன படித்தோமோ அவைகளை (எபே. 4:20) உடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதீர்கள் என்று தேவன் கட்டளையிடும் பொழுது, தேவன், நாம் பாவ வாழ்க்கையில் ஈடுபடக்கூடாது என்றே சொல்லுகிறார். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நாம் வாழக்கூடாது. பாவத்திலே வாழ்ந்து, தேவனுக்கு எதிராக கலகம் செய்வது, தேவனை துக்கப்படுத்து கிறது. அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பவில்லையென்றால், தேவன் நம்மை கடுமையாக தண்டிப்பார்.

**EZSR** **CHARLEDPALMA**

# புது சிருஷ்டியேக் காரியம்

தேவன் மனிதனை தமது சாயலாகப் படைத்தார். பிசாசின் தந்திரத்தினால் மனிதன் தேவ சாயலை இழந்தான். மனிதனின் மீறுதலினால் இழந்து போன அந்த சாயலை, மனிதனிடம் மீண்டும் நிலைநாட்டும் பொருட்டே மனுஷகுமாரன் இவ்வுலகில் உதித்தார் (லூக். 19:10) அது முதற்கொண்டு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை மட்டுமாக தேவ சாயலை மனிதனுக்கு அளிக்கிறதான அந்த உன்னதமான காரியமே சபையாகிய கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தில் நடந்தேறி வருகிறது.

ஜனங்கள் தேவனோடு உறவாட மோசேயின் மூலமாக தேவன் ஒரு தற்காலிக ஏற்பாட்டை செய்தார். அதுவே பழைய ஏற்பாடு. அதில் மோசே கிறிஸ்துவின் முதலாம் வருகையை முன்னறிவித்தான் (உபா 18:15) மேலும் தேவன் ஜனங்களுக்கு புதிய ஏற்பாட்டை (உடன்படிக்கை) ஏற்படுத்துவேன் என்றும், யாவருக்கும் நவமான, ஏக இருதயத்தையும் அருளுவேன் என்றும் எரேமியா, எசேக்கியேல் போன்ற தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக முன்னறிவித்தார்.

தேவன் உலக ஜனங்களுக்கு அருளுவேன் என்ற வாக்குத்தத்தம் இன்றைக்கு சபையில் கிறிஸ்துவின் வழியில் நடக்க முன்வருவோரிடமே நிறைவேறுகிறது. ஒரு மனிதன் கிறிஸ்துவை அறிந்து அவரை பின்பற்றும் போது புது சிருஷ்டியாகிறான். இதைக்காட்டிலும் ஒருவனுக்கு வேறு எதுவும் முக்கியமில்லை (கலா 6:15 மாற் 8:36) நாம் புதுசிருஷ்டியாக மாறுகிற காரியம் வசனங்களைக் கேட்டு ஞானஸ்நானத்திற்குக் கீழ்படியும்போது துவங்குகிறது. கிறிஸ்து இதை மறுபிறப்பு என்று குறிப்பிடுகிறார். அப்படிப் பிறந்தவர்கள் வளர வேண்டுமானால், ஞானப்பாலாகிய வசனத்தின் மீது வாஞ்சை வேண்டுமென்று பேதுரு ஆசிரியர் (1பேது 2:1-3) குறிப்பிடுகிறார்.

வேத வசனங்களுக்கு நம் வாழ்வில் முன்னுரிமை கொடுக்காவிட்டால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு சூன்யம்தான்! அதனால் தான் ஆண்டவராகிய இயேசு **வார்த்தை** எனப்படுகிறார். அவரில் நிலைத்திராத கொடி அறுப்புண்டு போகும், அவரே நமக்கு ஜீவனாய் இருக்கிறார். நாம் புதுசிருஷ்டியாக மாறுவதற்கு கிறிஸ்துவே நமக்கு மாதிரி. ஆவிக்குரிய வளர்ச்சியடைய, புதுசிருஷ்டியாக மாற மனுஷரை நாம் பின்பற்றினால் தோல்வியடைய வாய்ப்புகள் அதிகம். முக்கியமாக இளம் கிறிஸ்தவர்கள்

புதிதாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் நேரடியாக தேவனோடு உறவாட உரிமைப் பெற்றவர்களானதால் வேத வசனங்களை தங்களுக் கென்று ஏற்று அதை நடைமுறைப்படுத்தும் கடமை அவர்களுக்கு இருக்கிறது.

அது போல புதுசிருஷ்டியாகிற காரியம் நிச்சயமாக நாம் தொடர்ந்து இடைவிடாமல் சபைக் கூடுதலில் கலந்து கொள்ளும் போது மாத்திரமே சாத்தியமாகும். நாம் அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஏவப்பட வேண்டு மானால் சபைக் கூடியே ஆக வேண்டும். தேவனோடும் அவருடைய குமாரன் இயேசுவோடும் ஐக்கியமாக இருக்க சபை கூடவேண்டும். ஒருவரி லொருவர் அன்பு கூரவேண்டும் என்ற நம் ஆண்டவர் இயேசுவின் கட்டளை நிறைவேற்ற படவேண்டுமானால் சபை கூடவேண்டும். தேவனுடைய ஆலோசனைகளை நம் வாழ்வில் பின்பற்ற மனதாயிருந்தால் (எபே. 3:9,10) கண்டிப்பாக நாம் சபை கூடியே ஆகவேண்டும்.

அதுமாத்திரமல்ல நாம் புதுசிருஷ்டியாக மாறுவதற்காக ஞானஸ் நானத்தில் தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவரை பரிசாகக் கொடுத் துள்ளார். அவரின் துணையில்லாமல் நாம் புதுசிருஷ்டியாக மாறமுடியாது (ரோம 8:11,26; அப். 15:8,9) இருதயத்தில் சுத்தமடைவது, மேட்டிமை, பகை, பொறாமை, வெளிவேஷம், மன்னிப்பதின் அவசியம் போன்ற யாவற்றையும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வேதத்தில் மட்டுமே நாம் காண்கிறோம் (2தீமோ. 3:16,17). ஆனால், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் பெரும்பாலான நாமகரணக் கூட்டங்களில் காணப்படுவது போல சரீரங்களை குலுக்குவதும், உளறலான சத்தம் போடுவதும் நிச்சயமாக சொல்லப்படாதவைகள். தேவனுடைய ராஜ்ஜியம் பேச்சிலே அல்ல! (நடைமுறைப்படுத்துகிறதான) பெலத்திலே இருக்கிறது (1கொரி. 4:20) நாம் எந்த அளவு வேத வசனங்களின்படி நடந்து கொள்கிறோம் என்பது தான் நம்மில் பரிசுத்த ஆவியானவர் இருப்பதற்கான அளவு கோலாகும்.

தேவன் நம்மிடத்தில் கனியுள்ள வாழ்க்கையை எதிர்பார்க்கின்றார். அதற்காகத்தான் நமக்கு ஜீவனையும் சுவாசத்தையும் கொடுத்து வழி நடத்துகிறார். நமக்காக, நம் ஆண்டவரும் அத்திமரத்திற்காக தோட்டக்காரன் பரிந்து பேசியது போல (லூக்கா 13:6, 1 யோவா 2:1) பரிந்து பேசி யேசுகிறார். நாம் தாவீதைப் போல அவருடைய சமூகத்தில் ஜெபித்து (சங். 51:10-12) கனியுள்ள ஜீவியம் செய்ய முன்வரவேண்டும். இல்லையெனில் கோடரி இப்போதே மரங்களின் வேரருகே வைக்கப்பட்டுள்ளது. எனவே வேத வசனத்தினால் நம் வாழ்வை மெருகேற்றுவோம். ஏனெனில், புது சிருஷ்டியே காரியமாயிருக்கிறது (2கொரி 5:17, கலா 6:15) தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம் அனைவரோடும் தொடர்ந்து இருப்பதாக. ஆமென்.

**K. பாண்டியன்**
**புதுச்சேரி.**

# யாக்கோபு கொல்லப்படுதல்

**அ**ன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களோடு சேர்ந்து இத்தொடர் கட்டுரையைப் படிப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். உங்களில் அநேகர் இத்தொடரைக் குறித்து பாராட்டுவது என்னை மேலும் உற்சாகப்படுத்துகிறது. தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாரக.

இரத்த சாட்சிகளில் **முதலாவதாக கொல்லப்பட்ட யாக்கோபு** குறித்தும் அவரது ஊழியத்தைக் குறித்தும் கடந்த மாதங்களில் படித்தோம். இம்மாதத்தில் யாக்கோபு கொல்லப்பட்டதைக் குறித்து படிப்போம்.

அப்போஸ்தலனாகிய இந்த யாக்கோபு அப்போஸ்தலரில் தூண்களில் ஒருவராக இருந்தவர். இந்தத் தூணை உடைத்துவிட்டால் ஊழியத்தை தடுத்து நிறுத்திவிடலாம் என்று சாத்தான் நினைத்தான் போலும் எனவே தான் முதல் இரத்த சாட்சியாக யாக்கோபு கொல்லப்பட்டிருக்கிறார். இன்றைக்கும் ஊழியம் செய்வதில் மிகவும் ஆர்வமுடையவர்களையும், தூண்களாக விளங்குபவர்களையும் சாத்தான் பலவிதத்தில் சோதிக்கின்றான். நாம் விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும்.

யாக்கோபின் ஊழியத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் ஒன்றும் கூறவில்லை என்றாலும், அவரது மரணத்தைக் குறித்து கூறுகின்றது. சாத்தான் இவரை முதலில் குறி வைத்ததற்கு அநேக காரணங்கள் இருக்கலாம். அதில் ஒன்று யாக்கோபு மகா தைரியசாலி. இந்த தைரியசாலியை ஒழித்துவிட்டால் சுவிசேஷம் தடைபட்டுவிடும் என்று சாத்தான் நினைத்து, யாக்கோபுக்கு முதல் குறி வைத்தான்! ஆனால் தேவதாசன் யாக்கோபோ அஞ்சா நெஞ்சம் கொண்டவர் மரணத்தைக் கண்டு பயப்படுகிறவரல்ல!. அன்றைய நாளில் ஏரோது சுவிசேஷத்திற்கு தடைவிதித்தான், சுவிசேஷத்தை அறிவிக்கின்ற சபையாரில் சிலரை துன்பப்படுத்தினான் (அப். 12:1) அக்காலத்திலே இந்த ஏரோது பாலஸ்தீனா முழுவதும் ஆண்டு வந்தான். கிறிஸ்தவர்களை துன்பப் படுத்தும்படி யூதர்களாலே தூண்டி விடப்பட்டான். அப்போஸ்தலர் நடபடிகள் 9:31ல் எருசலேம் சபையானது மகிழ்ச்சியும், சமாதானமும் பெற்றிருந்த போது, யாக்கோபு ஒருசமயம் ஸ்பெயின் சென்று ஊழியம் செய்திருக்கலாம்

என்று கருதப்படுகிறது. இங்கிருந்து பின்பு எருசலேம் திரும்பி இருக்கலாம். அப்போது துன்பப்படுத்தப்பட்ட காலமாக இருக்க வாய்ப்பு உள்ளது.

எரோது அநேகரை கைது செய்தான். அப்போது யாக்கோபும் கைது செய்யப்பட்டார். சிறையில் உள்ளவர்களுக்கு யாக்கோபு சுவிசேஷம் அறிவித்திருக்கின்றார். இதன் காரணமாக ஏரோது ஆத்திரப்பட்டு தேவனுடைய தாசனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான். (அப். 12:2) முதல் நூற்றாண்டிலே சுவிசேஷத்தினிமித்தமாக முதன் முதலில் கல்லெறிந்து கொல்லப்பட்ட கிறிஸ்தவர் ஸ்தேவான் (அப். 7:58-60). அதன் பின்பு சாத்தானின் கவனம் அப்போஸ்தலர்கள் மீது திரும்பியது சாத்தான் லாவகமாக ஏரோதை பயன்படுத்துவதை நன்றாக நம்மால் பார்க்க முடிகிறது. கி.பி. 44ல் எருசலேமில் ஏரோதுவால் யாக்கோபு பட்டயத்தினாலே கொல்லப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்!.

யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான் என்று லூக்கா எழுதுகிறார். பட்டயத்தினாலே கொலை செய்தான் என்று படிக்கும்போது பட்டயத்தினாலே தலை துண்டிக்கப்பட்டு சிறைச்சேதம் செய்யப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது! எப்படி என்றால் ஏரோது அந்திப்பா என்பவன் யோவான் ஸ்நானகனின் தலையை வெட்டும் படிக் கட்டளை கொடுத்திருந்தான் (மத். 14:9-10) அதே வழிமுறையைக் கையாண்டிருப்பான் இந்த ஏரோதும் (அப். 12:1,2).

அப்போஸ்தலரில் ஒருவரின் முதல் மரண தண்டனையைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் விளக்கமாக எழுதாமல் மிக சுருக்கமாக எழுதி யிருக்கிறார். கிரேக்க மொழி பெயர்ப்பில் ஏழு வார்த்தைகளை மட்டும் பயன்படுத்தியிருக்கிறார். இதற்கு காரணம் யாக்கோபின் மரணத்தைக் குறித்து அவர் அறிந்திருந்தார். ஆண்டவராகிய இயேசுவும் அறிந்திருந்தார். எப்படியென்றால் யாக்கோபின் தாய் சலோமி இயேசுவிடம் வந்து தனது இரண்டு மகன்களான யோவானுக்கும், யாக்கோபுக்கும் அவருடைய வலது மற்றும் இடது புறத்திலுள்ள அதிகாரமுள்ள இடங்களைத் தரும்படி கேட்ட போது, இயேசு யாக்கோபின் மரணத்தை முன்னுரைத்தார். இயேசு யாக்கோபு மற்றும் யோவானிடத்தில் நீங்கள் கேட்டுக்கொள்கிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை என்றும், நான் குடிக்கும் பாத்திரத்தில் அதாவது பாடுகளினால் வரும் மரணத்துடன் பாத்திரத்தைக் கூறுகிறார். நீங்கள் குடிக்க முடியுமா? என்று கேட்டார் அப்பொழுது யாக்கோபும், யோவானும் எங்களால் முடியும் என்றார்கள். அப்பொழுது, இயேசு என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள் என்றார் (மத். 20:20-23) இதன் அடிப்படையில் யாக்கோபு, இயேசு கிறிஸ்துவின் பாத்திரத்தில் இவ்வாறு பானம் பண்ணினான்.

பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணுவது குறித்து இயேசு கூறும் போது யாக்கோபு சிந்தித்திருக்க வாய்ப்பில்லை! ஆனால், தான் இரத்த சாட்சியாக தலை வெட்டப்படுகையில் யாக்கோபுவின் சிந்தையில் வந்திருக்கலாம். தான் கேட்டுக் கொண்டபடி இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்படி கொடுத்திருக்கிறார் என்று நினைத்திருக்கக்கூடும். இவ்விதமாக இயேசு கிறிஸ்துவோடு இருக்கும் அதிக பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார். தனது தியாக மரணத்தின் மூலமாக இயேசுவோடு ஆளுகை செய்யும் மகிமைக்குரிய இடத்தைப் பிடித்துக் கொண்டார் (வெளி. 20:4).

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை.**

## நீங்கள் எப்படி?


மாற்றங்கள் நிறைந்த இந்த உலகத்தில் மாறாத ஒருவரை நினையுங்கள் [நம்புங்கள்] கிறிஸ்து [எபி. 13:8.]

சோதனை என்னும் இருள் சூழும்போது தேவ கிருபை யென்னும் வெளிச்சத்தை நினையுங்கள். [சங். 50:15]

மரித்தவரை நினைத்து கலங்குவதை விட, ஆத்துமா வாழ்கிறதை நினைத்து மகிழுங்கள் [1 தெச. 4:17,18]

மன்னிக்க முடியாத சூழ்நிலை வரும் போது சிலுவையிலிருந்த இயேசுவை நினையுங்கள்.
[லூக். 23:34]

பூலோக வாழ்க்கையின் நஷ்டமே - பரலோக வாழ்க்கையின் லாபம் என்று எண்ணுங்கள். [பிலி. 3:10,11]



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**




| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | திங்கள் | காலை | 7:30 - 7:45 |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555